# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை - 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

முறையீட்டு மனு எண். 101/மா/2017

ஆணை எண். 141/2017

நாள் : 09/06/2017

திருமதி வி. காளியம்மாள்,
திண்டுக்கல். – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
திண்டுக்கல். – எதிர் மனுதாரர்

திண்டுக்கல், எண்.10, முனிசிபல் காலனி, நெட்டுத் தெருவில் வசிக்கும் திருமதி V.காளியம்மாள் அவர்களின் 27.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 02.05.2017 அன்று பெறப்பட்டு 101/மா/2017 என்னிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:-

## ஆணை

திண்டுக்கல், எண்.10, முனிசிபல் காலனி, நெட்டுத் தெருவில் வசிக்கும் திருமதி V.காளியம்மாள் அவர்கள், தான் திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்து கடந்த 31.07.2015 அன்று வயது முதிர்வின் காரணமாகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், எனினும் கடந்த இரண்டு ஆண்டுகளாக தனக்கு ஓய்வூதியம் எதுவும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். எனவே, தனக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பணப்பயன்கள் அனைத்தும் ஒரே தவணையில் வழங்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக, திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் 31.07.2015 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், ஓய்வு பெற்றவுடன் மனுதாரருக்கு அவரது பணிக்கால ஈட்டிய விடுப்பிற்கானத் தொகை, சேமநலநிதித் தொகை மற்றும் சிறப்பு சேமநலநிதித் தொகை போன்ற பணப்பயன்கள் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டன எனத் தெரிவித்துள்ளார். மேலும் ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்குவதற்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு திண்டுக்கல் உதவி

இயக்குநர் (மாநகராட்சித் தணிக்கை) அவர்களுக்கு 20.03.2017–ல் அனுப்பப்பட்டுள்ளதாகவும், தணிக்கைச் சான்று வரப்பெற்றவுடன் மனுதாருக்கு ஓய்வூதியம் மற்றும் பணப்பயன்கள் வழங்கப்பட்டு விடும் எனத் தெரிவித்துள்ளார். மேலும், போனஸ் வழங்கிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

3. மாநகராட்சியின் துப்புரவுப் பணியாளரான முறையீட்டு மனுதாரர் ஓய்வு பெற்று இரண்டு ஆண்டுகள் முடியும் நிலையில் உள்ளன. இரண்டு ஆண்டுகளாக முறையீட்டு மனுதாருக்கு ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதியப் பணப்பயன்கள் வழங்காமல் இருப்பது ஏற்புடையதல்ல. அடிப்படைப் பணியாளரான மனுதாரரின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மாநகராட்சி விரைந்து செயல்பட்டிருக்க வேண்டும். தற்பொழுது தணிக்கைச் சான்று பெறுவதற்கான முன்மொழிவு தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட முன்மொழிவும் அனுப்பப்பட்டு இரண்டு மாதம் கடந்து விட்டது. எனவே, இனியும் காலம் தாழ்த்தாமல் சம்பந்தப்பட்ட அலுவலரை அணுகி, தணிக்கைச் சான்றிதழ் பெற்றவுடன் முறையீட்டு மனுதாருக்கான ஓய்வூதியம் மற்றும் பிற பணப்பயன்களை வழங்குவதற்கான நடவடிக்கையை விரைவுபடுத்துமாறு திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 9–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்,
12-6-17

பெறுநர்

1. திருமதி வி. காளியம்மாள்,
10, முனிசிபல் காலனி,
தெட்டுத் தெரு,
திண்டுக்கல்.

2. மாநகராட்சி ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்